**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 605/2023**

**வழக்கு சாட்சி – அ.சா.8.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரங்கநாயகி. | ஜாதி | |
| தந்தை பெயர் / கணவர் பெயர் | ரெங்கசாமி. | தொழில் | காவல் ஆய்வாளர். |
| கிராமம் | குளத்தூர் | சமயம் | |
| தாலுக்கா | வேடசந்தூர் | வயது | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2024.

**(1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 வது எதிரி ஆஜர்.)**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், தென்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.03.2023 ஆம் தேதி, நான் சைபர் கிரையம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது, காவல் கண்காணிப்பாளர் உத்தரவுப்படி, தேனி மாவட்டம், குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு வகித்தேன். அப்போது, மாவட்டக் குற்றப்பிரிவு குற்ற எண். 11/2023, சட்டப் பிரிவுகள் – 417, 488, 471, 420, 294 பி இதச வழக்குக் கோப்பினை என் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கின் தொடர்புடைய ஆவணங்களின் உண்மைத் தண்மையை அறிய தடைய அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி, ந.க.1710 அலுவலக ஒப்பீடு அறிக்கை பெற்றள்ளார்கள். மேற்படி 1வது எதிரியை விசாரணை செய்து, 1வது சாட்சியின் மகன் முத்துக்குகன் என்பரின் வாகனத்தைப் போலியாக கையொப்பம் இட்டு, அதனை தெரிந்தே பிரியா என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்ததது சம்பந்தமாக தனி அறிக்கை கனம் நீதித்துறை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி என் விசாரணையில்

வட்டாரத் தடைய அறிவியல் நிபுணர் மதுரை இணை இயக்குநர், வேலுச்சாமி என்பவரை 19.05.2023 ஆம் தேதி விசாரணை செய்தும், தபால் அலுவலாக சென்ற மாவட்டக் குற்றப் பிரிவு 1710 திரு. செந்தில்குமார் அவர்களை விசாரணை செய்தும், அதன்பின்பும், கோயமுத்தூர் ஆர்.டீ.ஓ. சத்தியக்குமார் என்பவரை 14.04.2023 ஆம் தேதி விசாரணை வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இவ்வழக்கின் புகார்தாரரான ஓ. ராஜா என்பவரை மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி இவ்வழக்கானது புகாரில் கண்டுள்ளபடியும், தடைய அறிவியல் நிபுணர் அறிக்கையின்படியும் சரியாக இருந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் –417, 468, 471, 420, 294 பி இதச வழக்கினை 417, 468, 471, 420, 294 பி, 506(1), உ/இ 34 இதச வாக சட்டப் பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தயார் செய்தேன். நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேலும், இவ்வழக்கில் 1ம் எதிரி Crl.O.P. No. 7231/2023 வழக்கின் படி முன்சாமின் பெற்றிருந்ததாலும், நான் 1 மற்றும் 2 எதிரிகளை கைது செய்யவில்லை. சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6. கையெழுத்து நிபுணர் அறிக்கை மற்றும் அதன் இணைப்பு ஆவணங்கள் அ.சா.ஆ.7 ஆகும். இத்துடன் வழக்குக் கோப்பினை ஆராய்ந்து, 19.05.2023 ஆம் தேதி எதிரிகள் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் புகாரைத் தவிர வேறு எந்த ஆவணங்கள் அதனுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 08.03.2023 ஆம் தேதிக்கு முன்பு, காவல் கண்காணிப்பாளருக்கு, காவல் ஆய்வாளர் சீமைராஜ் என்பர் அறிக்கை அனுப்பியதாக ஆவணங்கள் எதுவும் வழக்குக் கோப்பில் எதுவும் இல்லை என்றால் 08.03.2023 ஆம் தேதியில் அறிக்கை அனுப்பியதாக குறிப்புள்ளது. மேற்படி அறிக்கை குற்ற இறுதி அறிக்கையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி

அறிக்கையில் 1வது எதிரியை அழைத்து விசாரித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், முன் விசாணையில் 41 குவிமுச பிரிவின் கீழ் அழைப்பாணை வரவில்லை என்று காட்டப்பட்டுள்ளது. 08.03.2023 க்கு முன்பு காவல் ஆய்வாளர் சீமைராஜ் மேற்கொண்ட விசாரணை ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால், தடைய அறிவியல் அறிக்கை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. டைய அறிவியல் அறிக்கை காவல் ஆய்வாளரால் அனுப்பபடவில்லை என்றாலும், துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்களால்அனுப்பப்பட்டது என்றாலும் சரிதான். தடைய அறிவியல் ஆய்விற்கு அனுப்பப்பட்ட ஆவணங்கள் சீலிட்டு அனுப்பட்டதாக குறிப்பு எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள S, Q, A போன்ற குறிப்புகள் தடைய அறிவியல் ஆய்வகத்தில் இடப்பட்ட குறிப்புக்களாகும். மேற்படி ஆய்விற்கு ரூ.4,500/- தொகை யாரால் கொடுக்கப்பட்டது என்றால், அப்போதிருந்த புலனாய்வு அதிகாரியால் கொடுக்கப்பட்டது. 02.01.2023 தேதியிட்ட வேண்டுகோள் கடிதத்தில் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கொடுக்கப்பட்ட கோப்பு எண். டெஸ்பேட்ச் எண். தேதி போன்ற விவரங்கள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். 27.02.2023 ஆம் தேதிய அறிக்கையில் 22.10.2022 ஆம் தேதியிட்ட கடிதம் துணைக் காவல் கண்காணிப்பாளரால் அனுப்பப்ட்டது என்று குறிப்பு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 22.10.2022 ஆம் தேதியன்று மேற்குறிப்பிட்ட இணைப்பு ஆவணங்கள் அனைத்தும் மாவட்டக் குற்றப் பிரிவு அலுவலகத்தில் பெறப்படவில்லை என்றால் அப்போதிருந்த புலன் விசாரணை அதிகாரியால் பெறப்பட்டுள்ளது. 02.01.2023 ஆம் தேதிய வேண்டுகோள் கடிதத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 7 கையொப்பங்களும் Q1 என குறியீடு செய்யப்பட்டு அனுப்பப்பட்டதாக மேற்படி கடிதத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குக் கோப்பில் அதே தேதியிட்ட கடிதத்தில் 8 கையொப்பங்கள் Q1 என

குறியீடு செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கடிதத்தில் மாதிரிக் கையொப்பங்கள் 10 உம் S1 என குறியீடு செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இணைப்பு ஆவணங்களில் வேண்டுகோள் கடிதத்தில் காட்டப்பட்டுள்ளபடி 7 கையொழுத்துக்கள் Q1 என்றோ, 10 கையெழுத்துக்கள் S1 என்றோ குறித்துக் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே வேண்டுகோள் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள குறியீடுகள் எங்கு வைத்து யாரால் மாற்றப்பட்டது என்பது குறித்து மேற்படி, கடிதத்தை கொண்டு சென்ற தலைமைக் காவலரை விசாரித்தேனா என்றால் இல்லை. பொதுவாக, தடைய அறிவியல் துறைக்கு அனுப்பப்படும் ஆவணங்கள் முறையாக சீலிட்டு, முத்திரையிட்டு அனுப்பப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கிலும், காவல் துணைக் காண்காணிப்பாளர் ஆவணங்களை சீலிட்டு, முத்திரையிட்டு அனுப்பினார் என்றால் சரிதான். சீலிட்டு, முத்திரையிடப்பட்ட ஆவணங்கள் எந்தத் தேதியில் தலைமைக் காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் 04.01.2023 ஆம் தேதியாகும். நிபுணர் அறிக்கையில் எவ்வித முத்திரையிடப்படாத காகித உறை ஒன்று ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது சம்பந்தமாக நான் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பின்பு, அசல் ஆவணங்களைக் கைப்பற்றி கையெபத்து நிபுணர் ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 ஆவணத்தில் 1வது எதிரிதான் கையெழுத்திட்டார் என்பதை நிரூபணம் செய்யும்பொருட்டு, 1வது எதிரியின் மாதிரிக் கையொப்பங்களைப் பெற்று ஆய்விற்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் புகார்தாரரை மட்டும் விசாரணை செய்தேன். புகார்தாரர் என் விசாரணையில் 15.07.2022 க்கு முன்பு 1வது எதிரியைத் தெரியும் என்பது குறித்து விவரம் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். 15.02.2022 ஆம் தேதியன்று மேற்படி வாகனத்தின் மதிப்பு எவ்வளவு என்பதை

அறியும்பொருட்டு, நான் இன்சூரன்ஸ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் புகார்தாரருக்கும், 1ம் எதிரிக்கும் இடையில் வாட்ஸ்–அப் மெசேஸ் போன் செய்திப் பரிவர்த்தனைகளை நடைபெற்றதாக தெரியவரவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் முன் பின் தெரியாத முதல் எதிரிக்கு எந்தத் தொகையும் பெறாமல் புகார்தாரர் அவரது வாகனத்தை கொடுத்ததாகத்தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். இது சம்பந்தமாக புகார்தாரரை கேட்டேனா என்றால் கேட்டேன். அவர் சரிவர பதிலளிக்கவில்லை. வட்டார போக்குவரத்து அலுவலரை நான் எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் போன் மூலமாகத்தான் நான் அவரை விசாரித்தேன். கையெழுத்து நிபுணர் வேலுச்சாமி என்பவரை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால், அவரது அலுவலகத்தில் வைத்து 19.05.2023 ஆம் தேதி மதியம் 2 மணிக்கு விசாரித்தேன். குற்ற இறுதி அறிக்கை எந்த தேதியில், யார் மூலமாக நீதிமன்றத்திற்கு ஒப்புவித்தேன் என்றால், நான் குற்ற இறுதி அறிக்கை மட்டும்தான் தயார் செய்தேன். யார் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்று எனக்குத் தெரியாது. குற்ற இறுதி அறிக்கை கையெழுத்திடும்போது, இரவு 7 மணியிருக்கும். காவல் ஆய்வாளர் சீமைராஜ் 08.03.2023 க்கு முன்பு மேற்கொண்ட விசாரணை நடவடிக்கைகள் குறித்து குற்ற இறுதி அறிக்கையில் எந்த விவரம் எதுவும் காட்டவில்லை என்றால் சரிதான். 08.03.2023 க்கு முன்பு நடந்த விசாரணையை அறிக்கை தாக்கல் செய்தால், வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் அதை வழக்கிலிருந்து மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ள ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி அதிகாரிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்ரர் அரசியல் பின்புணம் உள்ளவர் என்பதால், அவர் கொடுத்த பொய்யான புகாரினைப் பெற்று சரிவர புலன்விசாரணை செய்யாமல், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முத்துக்குகன் என்பவர் தனியாக புகார்

எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளதுபோல், எதிரிகள் எந்த குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

**2வது எதிரி தரப்பில், 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**